வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண்.4479 /அ4/2023 நாள் : .11.2023

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வித்துறை – ஊதிய முரண்பாடு – மூத்தோர் இளையோர் – ஊதிய முரண்பாடு களைதல் - பள்ளிக் கல்வி இயக்கத்தின் கீழ் வரும் அனைத்து நிலை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் மூத்தோர் இளையோர் ஊதிய முரண்பாட்டினை சரிசெய்தல் சார்பான கருத்துருக்கள் – பின்பற்றவேண்டிய தெளிவுரைகள் – தொடர்பாக. |
| பார்வை | 1.அரசாணை (நிலை)எண்.1400 நிதி (ஊகு)துறை நாள்.21.12.1998<br>2.அரசாணை (நிலை)எண்.25 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.22.03.2015.<br>3.அரசுக் கடித எண்.22508 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.03.09.2019<br>4.அரசாணை (நிலை)எண்.151 பள்ளிக் கல்வி பக(1(1)துறை நாள்.09.09.2022.<br>5. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை.6. ந.க.எண்.34750/எம்/2023 நாள்.26.06.2023 மற்றும் 25.10.2023 |

பார்வை 4 மற்றும் 5 இல் கண்டுள்ள அரசாணை மற்றும் செயல்முறைகளின்படி, பள்ளிக் கல்வித்துறையின்நிருவாக சீரமைப்பின் காரணமாக பள்ளிக் கல்வி இயக்கத்தின் கீழ்வரும் அனைத்து நிலை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் மூத்தோர் இளையோர் ஊதிய முரண்பாட்டினை சரிசெய்தல் தொடர்பான ஆணை வழங்கும் நிருவாக அதிகாரம் பெற்ற அலுவலராக பள்ளிக் கல்வி இயக்க்க நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் செயல்பட்டு வருகிறார்.

2. அதனைத் தொடர்ந்து மூத்தோர், இளையோர் ஊதிய முரண்பாடுகள் சார்ந்த கோரிக்கைகள் மற்றும் ஊதிய முரண்பாடுகளை சரிசெய்தல் சார்பான கருத்துருக்களை இவ்வியக்கத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பப்படும்போது கீழ்காணும் காரணிகளின் அடிப்படையில் ஆய்வு செய்து அனுப்புமாறு அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1) பணியில் மூத்தவரின் ஊதிய முரண்பாடு சரிசெய்ய பள்ளித் தலை மை ஆசிரியர் நிலையிலேயே ஆய்வு செய்து உரிய விகிளின்படி சரியாக இருப்பின் மட்டுமே பரிந்துரைக்க வேண்டும்.

2) பணியில் மூத்தவர் மற்றும் இளையோருக்கிடையே ஏற்படும் மேலாண்மைத் துறை மற்றும் நிதித் துறைகளால் அவ்வப்போது வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் தெளிவுரைகளின் அடிப்படையில் சமன் செய்யப்படுகின்றன. இவ்வரசாணைகள் மற்றும் தெளிவுரைகள் அனைத்து வகையான அரசு ஊழியர்களுக்கும் பொதுவானதாகும்.

3) இந்நிலையில் ஆசிரியர்களுக்கிடையேயான ஊதிய முரண்பாட்டினை மேற்படி அரசாணைகள் மற்றும் தெளிவுரைகளின் அடிப்படையில் கீழ்கண்டவற்றினையும் கருத்தில் கொண்டும் சமன் செய்யலாம்.

4) பணியில் இளையவரின் பணிப்பதிவேட்டில் சார்ந்த அலுவலரால் ( முதன்மை கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் / தலைமை ஆசிரியரால்) மட்டுமே அனைத்து பக்கங்களும் சான்றொப்பமிடப்பட வேண்டும். மேலும் எந்த பக்கமும் விடுபடவில்லை எனவும், அன்னாரினை பரிந்துரை செய்யும் நாளில் சார்ந்த ஆசிரியர்களின் (மூத்தோர் மற்றும் இளையோர்) ஊதிய நிர்ணயம் மீது தணிக்கைத் தடை ஏதுமில்லையெனவும், முகப்புக் கடிதத்தில் கட்டாயமாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

5) பணியில் மூத்தவர் மற்றும் பணியில் இளையவர் இருவரின் பதவி உயர்வுக்கான முன்னுரிமைப் பட்டியல் / தேர்ந்தோர் பட்டியல் எந்த பக்கமும் விடுபடாமல் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியரால் சான்றொப்பமிடப்பட வேண்டும்.

6) பணியில் மூத்தவ் மற்றும் பணியில் இளையவரின் கருத்துருக்களுடன் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறையின் கடித எண்.22508/FR-1/2019 – 1 நாள்.03.09.2019 இல் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையில் படிவங்கள் பிழையின்றி முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.

7) பணியில் மூத்தவரின் அசல் பணிப்பதிவேட்டின்படி உரிய பக்கங்களை ஒப்பு நோக்கு படிவத்தில் ஒவ்வொரு ஆண்டு ஊதியத்தின் விவரங்கள் அனைத்தும் சரியான முறையில் குறிப்பிடப்பட வேண்டும்.

8) பணியில் இளையவரின் நகல் பணிப்பதிவேட்டில் அனைத்தும் சரியாக இருப்பின் அதன் விவரத்தினை ஒப்பு நோக்கு படிவத்தில் சார்ந்த விவரத்தினை

தெளிவாக பணிப்பதிவேட்டின் பக்கங்களுடன் குறிப்பிட வேண்டும். கருத்துருக்கள் அனுப்பப்படும் நாள் வரையிலான அனைத்து பக்கங்களும் நகல் பணிப்பதிவேட்டில் இடம் பெற வேண்டும்.

9) மூத்தோர் மற்றும் இளையோருக்கு ஏற்கனவே ஊதிய முரண்பாடு சமன் செய்து ஆணை ஏதேனும் வழங்கப்பட்டு இருப்பின், அது குறித்த விவரத்தினை தெரியப்படுத்தி அதன் நகலினையும் கருத்தருவுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

10) பணியில் மூத்தவர் மற்றும் பணியில் இளையவரின் ஊதிய முரண்பாட்டினை குறிப்பாக எந்த அரசாணையினைப்டி களையலாம் என்ற விவரம் குறிப்பிடப்பட வேண்டும். ( உரிய அரசாணையின் நகல் இணைக்கப்பட வேண்டும்). ( அரசாணை 1 முதல் 7 வரை எனக் குறிப்பிடக் கூடாது). அந்த குறிப்பிட்ட அரசாணையின்படி எவ்வாறு ஊதிய முரண்பாடு ஏற்படுகிறது என்ற விவரம் மற்றும் அந்த அரசாணையின் நகலினை இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

11) ஒரே பாடத்திற்கான மற்றும் வெவ்வேறு பாடத்திற்கான பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கிடையேயான ஊதிய முரண்பாட்டினை பட்டதாரி நிலையிலேயே ஏற்படின் அதனைக் களையலாம். வெவ்வேறு பாடப் பிரிவுகளில் பட்டதாரி ஆசிரியர்களாக பணி நியமனம்செய்யப்பட்டவர்கள், பட்டதரிரி ஆசிரியர் பணி நிலையில் வேறு பாடப்பிரிவிலும், முதுகலை ஆசிரியர் பணிநிலையில் வேறுபாடப் பிரிவிலும் ஒப்பீடு செய்யக் கூடாது. வெவ்வேறு பாட முதுகலை பட்டதாரி ஆசிரியர்காள பதவி உயர்வு பெற்றோரை பதவி உயர்வுகளின் Seniority List வேறுபடும் என்பதால் அவர்கள் ஒரே நிலையாக கருத முடியாது.

12) ஒரே பாடத்திற்கான மற்றும் வெவ்வேறு பாடத்திற்கான பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களில், மூத்தவர் முதலில் முதுகலை பட்டதாரி ஆசிரியராக பதவி உயர்வு பெற்றிருந்தால், முதுகலை பட்டதாரி ஆசிரியர் நிலையில் இவர்களுக்கிடையேயான ஊதிய முரண்பாட்டினைக் களையலாம். அதே நேரத்தில் முதுகலைப் பட்டதாரி பாடத்திற்கான காலிப்பணியிட அடிப்படையில் இளைவர் முதலிலும், மூத்தவர் பின்னரும் முதுகலை பட்டதாரி ஆசிரியராக பதவி உயர்வு பெற்றால் முதுகலை பட்டதாரி ஆசிரியர் நிலையில் ஏற்படும் ஊதிய முரண்பாட்டினை களைய இயலாது.

13) ஒரே பாடத்திற்கான மற்றும் வெவ்வேறு பாடத்திற்கான பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் மூத்தவர் முதலில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்ற பின்னர் இளையவர் உயர்நிலை பள்ளித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்றிருந்தால், உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் நிலையில் இவர்களுக்கிடையேயான ஊதிய முரண்பாட்டினை களையலாம். ஆனால், ஏதாவது ஒரு காரணத்தினால் இளையவர் முதலிலும், மூத்தவர் பின்னரும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்றால் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் நிலையில் ஏற்படும் ஊதிய முரண்பாட்டினை களைய இயலாது.

14) ஒரே பாடத்திற்கான மற்றும் வெவ்வேறு பாடத்திற்கான முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு முதுகலை பட்டதாரி ஆசிரியர் நிலையிலும், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் நிலையிலும் இவர்களுக்கிடையேயான ஊதிய முரண்பாட்டினை சரிசெய்யலாம். ஏனெனில், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியருக்கான பதவி உயர்வு பாடத்தின் அடிப்படையில் அல்லாமல், அவர்களது தெரிவு பட்டியலின்படி அவர்கள் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பதவியில் உள்ள முதுநிலையின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படுகிறது.

15) வெவ்வேறு பாடப்பிரிவுகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் அவர்களுக்கான அடுத்த பதவி உயர்வான அதாவது முதுகலைப் பட்டதாரி பதவிக்கான பதவி உயர்வினை மூத்தவர் முதலிலும், இளையவர் பின்னரும் பெற்று இருப்பின், இவர்களுக்கிடையேயான முரண்பாட்டினை களையலாம். ஆனால், வெவ்வேறு பாடப்பிரிவுகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களில் தங்களுக்கான அடுத்த பதவி உயர்வினை அப்பதவிக்கான காலிப்பணியிட எண்ணிக்கையின் மாறுபாட்டால் இளையவர் முதலிலும் மூத்தவர் அதன் பின்னரும் பதவி உயர்வு பெற்ற நேந்வுகளில் இவ்விருவருக்கிடையேயான ஊதிய முரண்பாட்டினை களைய இயலாது.

16) ஊதியம் சமன் செய்யக் கோரும் விண்ணப்பதாரர் தேர்வாணைய Rank முதுநிலையாளர் என்பதற்கு மறுப்பதற்கில்லை. இருந்தாலும், தண்டனை, தாமதமாக பணி ஏற்றல், பதவி உயர்வினை உரிமைவிடல் மற்றும் சம்பளமில்லா விடுப்பு போன்ற காரணங்களினால் பணியில் மூத்தவரின் ஊதியம் ஈடுசெய்யக்

கோரும் நாளில் குறைவாகவே சம்பளம் பெற்று வந்திருப்பின், இளையவருக்கு ஈடாக அவரின் ஊதியத்தை உயர்த்தி ஈடசெய்யும் கோரிக்கை ஏற்க இயலாது.

17) பணியில் மூத்தவர் பதவி உயர்வில் பதவி உயர்வு நாளன்றே ஊதியம் நிர்ணயம் செய்து கொண்டுள்ளார். ஆனால் பணியில் இளையவர் வழக்கமான அடுத்த ஊதிய உயர்வு நாள் வரை கீழ்நிலை பதவி ஊதிய விகிதத்திலேயே தொடர்ந்திருந்து வழக்கமான ஆண்டு ஊதிய உயர்வு/ சிறப்புநிலை / தேர்வுநிலை பெற்ற பின்னர் உயர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்து, அவ்வாறே ஊதியமும் நிர்ணயம் செய்துள்ளார் எனில், எந்த விதியின் கிழ் என்பதற்கான காரணம் குறிப்பிட வேண்டும்.

18) பணியில் மூத்தவர் சாதாரண நிலையில் இருந்த பொழுது பதவி உயர்வு பெற்றுள்ள நிலையில், பணியில் இளையவருக்கோ தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்ட பின்னர் பதவி உயர்வு பெற்றிருந்தால், இளையவருக்கு இருமுறை ஊதிய நிர்ணய வாய்ப்புகள் உருவாகியதில் இந்த முரண்பாடு ஏற்பட்டுள்ளது எனில் அரசாணை (நிலை)எண்.25 பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த் (FR IV) துறை துறை நாள்.23.05.2018இன்படி அக்கருத்துருவினை ஆய்வு செய்து எந்த விதிகளின்படி ஊதிய முரண்பாடு ஏற்படுகிறது என்ற விவரத்தினை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

19) மூத்தவர் முந்தைய ஊதியக்குழு ஊதிய விகிதத்தில் உயர்கல்விக்கு ஊக்க ஊதியம் பெற்று இளையவர் பிந்தைய ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகித்த்தில் உயர்கல்வித் தகுதிக்கு உயர்த்தப்பட்ட ஊதிய விகித்த்தில் ( increased rate if increment) ஊக்க ஊதியம் பெறுவதால், இளையவர் மூத்தவரைவிட அதிக ஊதியம் பெற்று ஊதிய முரண்பாடு சமன் செய்ய தற்போதைய அரசாணை (நிலை)எண்.303(ஊகு)துறை நாள்.16.10.2017 இன்படி விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

20) ஊக்க ஊதிய உயர்வால் ஏற்படும் இனங்களில் உயர்கல்வி பயில்வதற்கு முன் அனுமதி பெறப்பட்ட விவரம் மற்றும் உண்மைத் தன்மை பெறப்பட்டு பணிப்பதிவேட்டில் பதியப்பட்ட பக்க நகல் கருத்துருவுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். மேலும், உயர்கல்வி பயின்ற பிறகு சிறப்பு நிகழ்வாக பின்னேற்பு பெறப்பட்டு இருப்பின் அதன் நகல் கருத்துருவுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

மேற்கண்ட தெளிவுரைகள் கட்டாயம் கடைபிடிக்காமல், பெறப்படும் கருத்துருக்கள் திருப்பியனுப்பப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. மேலும், இத் தெளிவுரைகளைப் பின்பற்றி கருத்துருவினை வேலூர், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு பரிந்துரை செய்து பணிந்தனுப்புமாறு அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறுது.

// ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

பெறுநர்

தலைமை ஆசிரியர்கள்,

அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி,

வேலூர் மாவட்டம்.

**நகல்.**

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலகம்,

காட்பாடி, வேலூர்.

மாவட்டக் கல்வி அலுவலர் ( இடைநிலை )

மாவட்க்க கல்விஅலுவலகம், வேலூர் தொடர் நடவடிக்கையின் பொருட்டு

அனுப்பலாகிறது.